# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

2026 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 07-ஆம் நாள், சனிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் தை மாதம் 24-ம் நாள் சனிக்கிழமை

இ.ம.எண். 13/2025 ன் அ.வ.எண்.32/2013

R.வேல்சாமி ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1) P.ஜயப்பன்

2) கலா

3)R.S.வசந்தராஜன்

4) சண்முகசுந்தரம் ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனுவானது 23.01.2026 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.A. டேவிட்சன் அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.ஜோசப் ராஜா ஜெகன் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியுள்ள நிலையிலும், இருதரப்பு வாத உரையை கேட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.07 15:20:10 +0530

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன்கீழ் மனுவில் கண்ட சீர்திருத்த விபரப்படி வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதிக்க கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்;-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தபசில் சொத்தானது செய்யது அப்துல் ஹரீம் சாகிப் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவரிடமிருந்து ராமசாமி நாடார் 22.06.1972 ம் தேதியில் கிரையம் பெற்றார். மேற்படி நிலத்தில் கிணறு இல்லாததால் கிணறு தோண்டி மின் இணைப்பு பெற்றார். ராமசாமி காலம்சென்ற பிறகு அவரது குமாரர்களான மயிலேறும் பெருமாள், தங்கபாண்டி, சுடலைமுத்து அவர்கள் வாய்மொழியாக பாகம் செய்து அனுபவித்து வந்தனர். வழக்கு தபசில் சொத்துக்கள் மனுதாரர் / வாதி வெளிநாட்டில் இருந்ததால் கவனிக்கப்படாததால் மூன்றாவது நபர் அனுவத்தில் அவர் கொடுத்திருந்ததாலும், வழக்கு தபசில் சொத்தின் எல்கைகளையும், வேலிகளையும் அவர் பொருட்படுத்தவில்லை. அவ்வாறு எல்கைகள் சரிவர பார்க்காத காரணத்தினால் தபசில் சொத்தின் அளவுகள் சரியில்லை. 19..01.2013 ம் தேதியில் மனுதாரர் / வாதி நிலத்தை அளவீடு செய்தபோதுதான் பிரதிவாதிகள் 30 செண்ட் நிலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதும், அங்கு சில கட்டுமான பணிகள் நடைபெற்று வந்ததும் தெரியவந்தது. அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதி வழக்கு 2ம் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ளது. அது குறித்து

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.07 15:20:18 +0530

வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயபடிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் /வாதியால் 14.02.2013 தேதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையிலேயே Recovery of possession கேட்கப்படவில்லை. வழக்கு தாக்கல் செய்து 12 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்த சீர்திருத்த வழக்குரையிலும் Recovery of possession கேட்கப்படவில்லை. தற்போது இந்த மனு மூலம் 12 ஆண்டுகள் 9 மாதங்கள் கழித்து Recovery of possession கேட்டுள்ளது காலவரையறை சட்டப்படி செல்லத்தக்கதல்ல. காலவரையறை சட்டம் Article 58-படி மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியதல்ல. அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பிறகு மனுதாரர் / வாதி அவருடைய வழக்கிலுள்ள Locuna நிரப்பும் விதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், தபசில் சொத்தானது செய்யது அப்துல் ஹரீம் சாகிப் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவரிடமிருந்து ராமசாமி நாடார் 22.06.1972 ம் தேதியில் கிரையம் பெற்றார். ராமசாமி காலம்சென்ற பிறகு அவரது குமாரர்களான மயிலேறும்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.07 15:20:26 +0530

பெருமாள், தங்கபாண்டி, சுடலைமுத்து அவர்கள் வாய்மொழியாக பாகம் செய்து அனுபவித்து வந்தனர். வழக்கு தபசில் சொத்துக்கள் மனுதாரர் / வாதி வெளிநாட்டில் இருந்ததால் கவனிக்கப்படாததால் மூன்றாவது நபர் அனுவத்தில் அவர் கொடுத்திருந்ததாலும், வழக்கு தபசில் சொத்தின் எல்கைகளையும், வேலிகளையும் அவர் பொருட்படுத்தவில்லை. அவ்வாறு எல்கைகள் சரிவர பார்க்காத காரணத்தினால் தபசில் சொத்தின் அளவுகள் சரியில்லை. 19..01.2013 ம் தேதியில் மனுதாரர் / வாதி நிலத்தை அளவீடு செய்தபோதுதான் பிரதிவாதிகள் 30 செண்ட் நிலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதும், அங்கு சில கட்டுமான பணிகள் நடைபெற்று வந்ததும் தெரியவந்தது. அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதி வழக்கு 2 ம் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ளது. எனவே அதுகுறித்து சுவாதீன பரிகாரம் கோரி வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என கூறியுள்ளார்.

4. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கில் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினை முற்றிலுமாக தீர்மானிக்க இம்மனுவில் கூறப்படும் திருத்தம் அவசியமானது. மனுதாரரால் கூறப்படும் திருத்தத்தால் இவ்வழக்கின் தன்மை எவ்விதத்திலும் மாறபோவதில்லை. மேலும், தரப்பினர்களுக்கிடையே பல்வேறு வழக்குகள் இது தொடர்பாக எழாமல் தடுக்கவும் மற்றும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இம்மனுவானது அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.07 15:20:33 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.07 15:20:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.07 15:20:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

**மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்**

**வரைவு, சீரான உத்தரவு**

**இ.ம.எண்.**13/2025 **இன்**

**அ.வ.எண்.**32/2013

**தேதி.**07.02.2026